# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8092383

1. District : VELLORE DISTRICT மாவட்டம் PS: VIGILANCE AND ANTICORRUPTION காவல்நிலையம் Year: 2019 ஆண்டு FIR No.: 10/2019 மு.த.அ. எண் Date: 24-05-2019 நாள்
2. (i) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (ii) Act சட்டம்: PREVENTION OF CORRUPTION (AMENDMENT) ACT 2018. Sections பிரிவுகள்: 7(a) of PREVENTION OF CORRUPTION (AMENDMENT) ACT - 2018.
   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :
3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 18-05-2019 Date to : நாள் வரை AND 22-05-2019
   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 24-05-2019 Time : நேரம் 1300 HRS
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் VOLUME-I 2019. Time : நேரம் 1300 HRS
4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக TAMIL TYPED COMPLAINT.
5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் 30 KMS, WEST.
   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி PALLIKONDA, POLICE STATION,
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்
6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் Tr. P. APPUNU (b) Father's/ ~~Husband's~~ Name : தந்தை / கணவர் பெயர் PERIYANNAN
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality : நாட்டினம் INDIAN. (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் DRIVER (g) Address : முகவரி NO: 1/627C, ARASAMARA STREET, VALLANDARAMAM VILLAGE, ANAICUT TALUK, VELLORE DISTRICT.
7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   Tr. MURUGAN, SUB-INSPECTOR OF POLICE, PALLIKONDA POLICE STATION, VELLORE DISTRICT.
8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   — NO DELAY —

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9 Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary) —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிரேத விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான மரண எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம் (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

SEPERATE SHEET ENCLOSED

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS ..........................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே முதல் தகவல் அறிக்கையில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ........................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் கொடுத்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

P. Appu 24.5.2019

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகை பதிவு

(signature) 24/05/19

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
24-05-19 at 1500 Hrs.

Name பெயர் P. VIJAYALAKSHMI.
Rank: நிலை INSPECTOR OF POLICE
VIGILANCE AND ANTI CORRUPTION, VELLORE

GCP 240-34(Type) 90,000 Cps.

<u>பணிந்து அனுப்பப்படுகிறது:-</u> வேலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு ஆய்வாளர் P.விஜயலட்சுமி ஆகிய நான் 24.05.2019-ஆம்தேதி மதியம் 1300 மணிக்கு அலுவலகத்தில் ஆஜரில் இருந்தபோது, புகார்தாரர் திரு. P.அப்புனு, வயது.30, த/பெ.பெரியண்ணன், எண்.1/627-C, அரசமர தெரு, வல்லண்டராமம் கிராமம் மற்றும் அஞ்சல், அணைக்கட்டு தாலுக்கா, வேலூர் மாவட்டம் என்பவர் நேரில் ஆஜராகி கொடுத்த புகாரினை பெற்று, விசாரணையில் என்னுடைய தகவலாளர்களை தொடர்பு கொண்டு எதிரியின் நடத்தை குறித்து விசாரணை செய்ததில் எதிரியானவர், அவரது எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள பொதுமக்களிடமிருந்து லஞ்சமாக பணம் பெறுவது உறுதி செய்யப்பட்டது. மேலும் புகார்தாரரின் நம்பகத்தன்மை மற்றும் எதிரியின் நடத்தை குறித்து விசாரணை செய்து, திரு.முருகன் உதவி ஆய்வாளர், பள்ளிகொண்டா காவல் நிலையம், வேலூர் மாவட்டம் என்பவர் மீது 7(a) of Prevention of Corruption (Amendment) Act 2018-ன் கீழ் வழக்கு பதிவு செய்ய தகுந்த முகாந்திரம் இருந்தமையால், சென்னை இயக்குநரக ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அனுமதி பெற்று, திரு.P.அப்புனு என்பவர் கொடுத்த புகார் மனுவின் பேரில், இன்று 24.05.2019-ஆம் தேதி பகல் 1430 மணிக்கு வேலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.10/2019 சட்ட பிரிவு 7(a) of Prevention of Corruption (Amendment) Act 2018-ன் கீழ் திரு.முருகன், உதவி ஆய்வாளர், பள்ளிகொண்டா காவல் நிலையம், வேலூர் மாவட்டம் என்பவர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது. புகார்தாரர் கொடுத்த புகாரின் விவரம் பின்வருமாறு: அனுப்புதல் P.அப்புனு, வயது.30 த/பெ.பெரியண்ணன் எண்.1/627-C, அரசமர தெரு வல்லண்டராமம் கிராமம் மற்றும் அஞ்சல் அணைக்கட்டு தாலுக்கா வேலூர் மாவட்டம். பெறுநர் காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள் வேலூர் லஞ்ச ஒழிப்பு துறை அலுவலகம் வேலூர். ஐயா, என் பெயர் அப்புனு நான் 10-ம் வகுப்பு வரை படித்துள்ளேன் என் அப்பா பெரியண்ணன் அம்மா காந்தா. என் உடன் பிறந்த அண்ணன்கள் கோட்டீஸ்வரன், ஜெயபாபு, பிரகாசம் நான்தான் என்னுடைய குடும்பத்தில் கடைசி மகன். நான் கடந்த 2014 ஆம் ஆண்டு முதல் டாடா ஏஸ் (TATA Ace) நான்கு சக்கர வண்டியை லோன் பெற்று சொந்தமாக என்னுடைய பெயரில் வாங்கினேன் வண்டி எண்.TN 23 BJ 3040 அந்த டாடா ஏஸ் வாகனத்தை சரக்கு ஏற்றி செல்வது ஆடு மாடுகள் மற்றும் வைக்கப்போர் ஏற்றி செல்வது போன்ற வேலைகளை செய்து அதன் மூலம் கிடைக்கும் வாடகை தொகையில் வாழ்ந்து வருகிறேன். கடந்த 09.05.2019 அன்று நான் என்னுடைய TN 23 BJ 3040 என்ற TATA ACE வண்டியில் மதியம் சுமார் 13.30 மணியளவில் வல்லண்டராமம் கிராமத்தில் உள்ள என்னுடைய வீட்டில் இருந்து சுமார் 2 கி.மீ

தொலைவில் ஏரியில் நடைபெற்ற வேலங்காடு திருவிழாவிற்கு என்னுடைய வண்டியை ஒட்டிச் சென்று பூஜை போடலாம் என்று அண்ணாச்சிபாளையம் கிராமம் வழியே சென்று கொண்டிருந்தபோது அங்கு ராஜாமணி என்பவர் வீட்டிற்கு எதிரே நான் இடதுபக்கமாக ஏரியை நோக்கி தெற்குநோக்கி வண்டியை ஒட்டிச் சென்று கொண்டிருந்தபோது, எதிர்திசையில் மூலைகேட்டில் இருந்து வல்லண்டராமம் நோக்கி TN 21 AP 6883 Bajaj Discover வண்டியில் வந்த இரண்டு ஆண் நபர்கள் தடுமாறி கீழே விழுந்துவிட்டார்கள். உடனே நான் என்னுடைய வண்டியை ஓரமாக நிறுத்தி இறங்கி சென்று அவர்களுக்கு உதவி செய்தேன். அங்கு அக்கம் பக்கத்தில் இருந்தவர்களும் கீழே விழுந்தவர்களுக்கு உதவி செய்தார்கள், 108 ஆம்புலன்ஸ் வந்து அதில் அவர்களை ஏற்றி அனுப்பிய பிறகு நான் என்னுடைய வண்டியை எடுத்துக்கொண்டு ஏரியில் நடந்த திருவிழாவிற்கு போகாமல் மீண்டும் என்னுடைய வீட்டிற்கே வந்துவிட்டேன். அதன் பின்னர் தான் இருசக்கர வாகனத்தில் வந்து தவறி கீழே விழுந்தவர்கள் மூலைகேட் கிராமத்தை சேர்ந்த ஆறுமுகம் மகன் சிவலிங்கம் மற்றும் ராஜவேல் மகன் முருகன் என்று எனக்கு தெரிந்தது. பின்னர் கடந்த 17.05.2019 அன்று என்னுடைய செல்போனுக்கு பள்ளிகொண்டா போலீஸ் ஸ்டேஷனில் இருந்து எஸ்.ஐ பேசுவதாக சொல்லி உன் மீது ஆக்ஸிடென்ட் கேஸ் கொடுத்திருக்கிறார்கள் மூலைகேட்டை சேர்ந்த இரண்டு பேர் மீது மோதிட்டியாமே அதனால் உன்னுடைய TATA Ace வண்டியை எடுத்துக்கொண்டு பள்ளிகொண்டா போலீஸ் ஸ்டேஷன் வா என்று சொன்னார் நான் வருவதாக சொன்னேன். ஆனால் 17.05.2019 அன்று பள்ளிகொண்டா போலீஸ் ஸ்டேஷனுக்கு வண்டியை எடுத்து செல்லவில்லை. பின்னர் 18.05.2019 அன்று மீண்டும் எஸ்.ஐ என்னுடைய செல்போனுக்கு என்னை தொடர்பு கொண்டு நான் உன் வீட்டிற்கு வந்தால் உனக்கு அசிங்கமாகிவிடும் ஒழுங்கு மரியாதையாக உன் வண்டியை எடுத்துக்கொண்டு பள்ளிகொண்டா போலீஸ் ஸ்டேஷனுக்கு வாங்க என்று சொன்னார் நான் வேறு வழியில்லாமல் 18.05.2019 அன்று காலை சுமார் 12.15 மணிக்கு என்னுடைய TATA ACE TN 23 BJ 3040 வண்டியை ஒட்டிக்கொண்டு பள்ளிகொண்டா போலீஸ் ஸ்டேஷன் சென்றேன். அங்கு முருகன் உதவி ஆய்வாளர் பள்ளிகொண்டா காவல் நிலையத்தில் இருந்தார் அவரிடம் என்னை அறிமுகம் செய்து கொண்டு தகவல் சொன்னேன் அதற்கு அவர் வெள்ளிக்கிழமையே வர சொன்னேன் நீ இப்ப வர? எத்தனை முறை உனக்கு போன் செய்வது நான் உன் இடத்திற்கு வந்திருந்தால் உன் கதையே வேறமாதிரி ஆகியிருக்கும் என்று சொல்லி நான் என்னுடைய வண்டியை பள்ளிகொண்டா காவல் நிலையத்தின் மணல் டிப்பர் லாரிகள் பறிமுதல் செய்து நிறுத்தி இருந்த இடத்தில் நிறுத்தியிருந்ததை பார்த்துவிட்டு வண்டியின் சாவியை என்னிடம் வாங்கி கொண்டு சரி நீ வண்டியின் ஒரிஜினல்

ஆர்.சி. புக் எடுத்துக்கொண்டு வா வண்டி நாளைக்கு ஆர்.டி.ஓ ஆபீஸ் போகவேண்டும் என்று சொன்னார். வரும்போது பணம் ரூ.5,000/- எடுத்து வா நாம சீக்கிரம் வண்டியை எடுத்துவிடலாம் உன்னை பெயிலில் விட்டுவிடுகிறேன் என்றார். நான் 20.05.2019 தேதி கே.வி.குப்பத்தில் உள்ள Shriram Finanace-ற்கு சென்று லெட்டர் எழுதி கொடுத்த பிறகு ஒரு நோட்டு புக்கில் என்னிடம் கையெழுத்து வாங்கி கொண்டு ஒரிஜனல் ஆர்.சி. புக்கை என்னிடம் கொடுத்தார்கள். அதனை வாங்கி எடுத்துக்கொண்டு பள்ளிகொண்டா போலீஸ் ஸ்டேஷனுக்கு சுமார் 12.00 மணிக்கு சென்று திரு.முருகன் உதவி ஆய்வாளர் அவர்களை சந்தித்தேன். அப்போது அவர் யாரையோ விசாரணை செய்து கொண்டிருந்தார். என்னை கொஞ்ச நேரம் வெளியில் இரு கூப்பிடுகிறேன் என்றார். பின்னர் 30 நிமிடங்கள் கழித்து என்னை கூப்பிட்டார் என்னிடம் இருந்து ஆர்.சி புக்கை வாங்கி கொண்டு சரி மறுநாள் 21.05.2019 அன்று வா உன்னை அரஸ்ட் காட்டி பெயிலில் விடவேண்டும் உனக்கு ஜாமீன் கையெழுத்து போட 2 பேரை கூட்டிவா என்று சொல்லி அனுப்பிவிட்டார். 21.05.2019 அன்று நான் எனக்கு தெரிந்த குணசேகர் மற்றும் கருணாகரன் என்பவரை அழைத்து சென்றேன் அவர்களிடம் என்னை ஜாமினில் விடுவதற்காக கையெழுத்து வாங்கினார்கள் அப்போது தான் அன்று என் மீது சிவலிங்கம் என்பவர் கொடுத்த புகாரில் விபத்து வழக்கு போட்டுள்ளார்கள் என்பது தெரிந்தது. பின்னர் என்னுடைய TATA Ace வண்டியை எடுத்துக்கொண்டு வேலூர் ஆர்.டி.ஓ ஆபீஸ் சென்று காட்ட போகும்போது இந்த லட்டரை என்னிடம் இருந்து வாங்கி கொண்டு போ என்று சொல்லி ஆர்.டி.ஓ ஆபீசுக்கு லட்டர் ஒன்றை கொடுத்தார். வேலூர் கோர்டில் டியூட்டியா உள்ள பள்ளிகொண்டா பெண் தலைமை காவலர் வருவார் நான் போன் செய்து சொல்லிவிடுகிறேன் என்று சொல்லி என்னை அனுப்பினார். நான் அங்கிருந்த வண்டியை ஓட்டிக்கொண்டு வேலூர் வந்து எஸ்.ஐ கொடுத்த நம்பருக்கு போன் செய்து பெண் தலைமை காவலருக்கு தகவல் சொன்னேன். அவர் என்னை ஆர்.டி.ஓ ஆபீஸ் அருகில் வரச்சொன்னார். நான் 21.05.2019 அன்று மதியம் வண்டியை கொண்டு சென்று நிறுத்தினேன். பெண் தலைமை காவலரும் வந்தார் வண்டியை பிரேக் இன்ஸ்பெக்டர் இன்ஸ்பெக்ஷன் செய்து முடித்துவிட்டு நீங்கள் மறுநாள் 22.05.2019 ஆர்.டி.ஓ அவர்களை தான் பார்க்க வேண்டும். அவர் எவ்வளவு பைன் வரும் என்று சொல்வார் என்று சொன்னார் பின்னர் நானும் பெண் தலைமை காவலரும் என்னுடைய TATA Ace வண்டியில் வேலூரில் இருந்து பள்ளிகொண்டா காவல் நிலையத்திற்கு வந்தோம் வரும் வழியில் பள்ளிகொண்டா டோல்கேட்டில் எஸ்.ஐ திரு.முருகன் அவர்கள் என்னை பார்த்து ஏ வண்டியை ஸ்டேஷனில் நிறுத்திவிட்டு சாவியை கொடுத்துவிடு போகும்போது என்னை வந்து

பார்த்துவிட்டு போ என்று சொன்னார். நான் வண்டியை பள்ளிகொண்டா போலீஸ் ஸ்டேஷனில் நிறுத்திவிட்டு சாவியை அங்கிருந்த காவலரிடம் கொடுத்துவிட்டேன். அப்போது பெண் தலைமை காவலர் நான் 22.05.2019 அன்று ஆர்.டி.ஓ ஆபீஸ் செல்வதற்கான தபாலை என்னிடம் கொடுத்தார். அதனை நான் வாங்கி கொண்டு மீண்டும் டோல்கேட் சென்று திரு.முருகன் உதவி ஆய்வாளரை சென்று பார்த்தேன் சரி எங்கே பணம் என்று கேட்டார் சார் இப்போ என்னிடம் பணம் இல்லை என்று சொல்லி அங்கிருந்து சென்றுவிட்டேன். 22.05.2019 அன்று நான் என்னுடைய வீட்டில் இருந்து பள்ளிகொண்டா போலீஸ் ஸ்டேஷன் சென்று திரு.முருகன் உதவி ஆய்வாளரை சந்தித்தேன். அவர் உன்னை ஜாமினில் விட்டதற்கும், வண்டியை MV இன்ஸ்பெக்சன் அனுப்பியதற்கும் என்னுடைய செலவுக்கு பணம் ரூ.5,000/- எனக்கு கொடுத்துவிடு, வேலூர் சென்று ஆர்டர் வாங்கி வா உன் வண்டியை ரிலீஸ் செய்கிறேன் என்றார். அதன் பின்னர் நான் வேலூர் ஆர்.டி.ஓ ஆபீஸ் சென்று என்னிடம் கொடுத்த தபாலை கொடுத்து அதற்கு ரூ.700/- கட்டவேண்டும் என்று சொன்னார்கள். நானும் பணத்தை கட்டிய பின்னர் ரசீது கொடுத்தார்கள். அதனை வாங்கி கொண்டேன். அதனுடன் பள்ளிகொண்டா காவல் நிலையத்திற்கு ஒரு தபாலை ஆர்.டி.ஓ ஆபீஸில் கொடுத்தார்கள். தபாலை கொடுத்தபோது இதனை காவல் நிலையத்தில் கொடுத்தால் தான் உன் வண்டியை விடுவிப்பார்கள் பத்திரமாக கொண்டு சென்று கொடுத்து உன் வண்டியை ரிலீஸ் செய்து கொள் என்று சொன்னார்கள். நானும் அந்த தபாலை வாங்கி வேலூரில் இருந்து பள்ளிகொண்டா போலீஸ் ஸ்டேஷனுக்கு மாலை சுமார் 6.00 மணிக்கு சென்று திரு.முருகன் உதவி ஆய்வாளர் அவர்களை சந்தித்தேன். வேலூர் ஆர்.டி.ஓ ஆபீஸில் கொடுத்த தபாலை அவரிடம் கொடுத்தேன். அதனை வாங்கி கொண்ட அவர் என்னை பார்த்து டேய் உன் வேலை எல்லாம் முடிந்துவிட்டது என் கையில் ஒன்றும் இல்லை பணத்தை கொடுத்துவிட்டு வண்டியை எடுத்துக்கொண்டு போ என்று சொன்னார். அதற்கு நான் என்னிடம் பணம் இல்லை சார் என்றேன் அவர் உன்னை ஜாமினில் விட்டுள்ளேன் இது வழக்கமான செலவு தான் ரூ.3,000/-தை கொடுத்தால் மட்டுமே உன் வண்டியை எடுத்துபோகலாம் இல்லை என்றால் இங்கேயே தான் இருக்கும் உனக்கு எத்தனை முறை சொல்வது என்று சொல்லி என்னை திட்டி அனுப்பிவிட்டார். நான் 23.05.2019 அன்று திரு.முருகன் காவல் உதவி ஆய்வாளரை பள்ளிகொண்டா காவல் நிலையம் சென்று சந்திக்க சென்றேன் அவர் காவல் நிலையத்தில் இல்லை வாக்கு எண்ணிக்கை சம்மந்தமான பணியில் இருப்பார் என்று நினைத்து அங்கிருந்து வந்துவிட்டேன். பள்ளிகொண்டா போலீஸ் ஸ்டேஷன் உதவி ஆய்வாளர் திரு.முருகன் அவர்கள் என்னை ஜாமினில் விட்டதற்காக மற்றும் என்னுடைய TATA Ace வண்டியை விடுவிக்க

லஞ்சமாக கேட்கும் பணம் ரூ.3,000/-தை கொடுத்து நான் என்னுடைய வண்டியை விடுவிக்க விரும்பவில்லை ஆகையால் என்னிடம் லஞ்சமாக பணம் ரூ.3,000/- கேட்கும் திரு.முருகன் பள்ளிகொண்டா போலீஸ் ஸ்டேஷன் எஸ்.ஐ மீது சட்டப்படி நடவடிக்கை எடுத்து என்னுடைய வண்டியை மீட்டு தருமாறு கேட்டுக்கொள்கிறேன். இத்துடன் வேலூர். ஆர்.டி.ஓ அவர்கள் பள்ளிகொண்டா போலீஸ் ஸ்டேஷன் உதவி ஆய்வாளருக்கு எழுதி எனக்கு நகல் என்று எழுதி கொடுத்த கடிதத்தின் நகலினை இத்துடன் இணைத்துள்ளேன். இப்படிக்கு, ஒம்/- xxxxxxx, (P.Appunu), 24.5.2019.

Sir,

The complaint given by Tr.P.Appunu, 30/2019, S/o Periyannan, residing at No. 1/627-C, Arasamara Street, Vallandaramam village and post, Anaicut Taluk, Vellore District was received on 24-05-2019 at 1300 hrs. After verifying the antecedents of accused and the credibility of the complainant with the approval of superiors and concurrence from the DVAC registered a case in Vellore V&AC Cr.No.10/2019 u/s 7(a) of P.C (Amendment) Act 2018 on 24-05-2019 at 1430 hrs. Sd/-xxxxx 24.05.2019 (P.VIJAYALAKSHMI) Inspector of Police, V&AC, Vellore.

The registered original First Information Report along with the complaint of Tr.P.Appunu, 30/2019, S/o Periyannan, residing at No. 1/627-C, Arasamara Street, Vallandaramam village and post, Anaicut Taluk, Vellore District and the copy of letter given by RTO., Vellore to the Sub-Inspector of Police, Pallikonda P.S. for releasing the vehicle bearing Regn.No.TN 23 BJ 3034 are sent to the Hon'ble Chief Judicial Magistrate and Special Judge, Vellore and the other copies of FIR to the officers concerned.

**Encl.:**

1) The complaint of Tr.P.Appunu (30/2019), S/o Periyannan, residing at No. 1/627-C, Arasamara Street, Vallandaramam village and post, Anaicut Taluk, Vellore District.

2) The copy of letter given by RTO., Vellore to the Sub-Inspector of Police, Pallikonda P.S. for releasing the vehicle bearing Regn.No.TN 23 BJ 3034

Viji 24/5/19

(P.VIJAYALAKSHMI)
Inspr. of Police
V&AC, Vellore.